# 24-11-2024 செய்தி

## விசாரணை கைதிகள் விடுதலை – விடிவு ஏற்படுமா?

- நம் நாட்டு சிறைகளில் அதிகளவில் விசாரணைக் கைதிகள் உள்ளதால், எப்போதும் நெரிசல் காணப்படுகிறது. இது, அரசுக்கு வீண் செலவையும், தேவையில்லாத சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது.
- இந்நிலையில், குற்றவியல் நடைமுறை சட்டத்துக்கு மாற்றாக 'பாரதிய நாகரிக் சுரக்ஷாசன்ஹிதா' என்ற சட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- இந்த, சட்டத்தின் 479வது பிரிவின்படி, தூக்கு தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்க வாய்ப்பில்லாத, மற்ற குற்றங்களில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள விசாரணை கைதிகள், அவர்களுக்கு கிடைக்கக்கூடிய அதிகபட்ச தண்டனையில், பாதி காலத்தை அனுபவத்திருந்தால், விடுதலை செய்யலாம், இது முந்தைய சட்டத்திலும் உள்ளது.

**விசாரணை கைதி**

- அதே நேரம் புதிய சட்டத்தில், முதல் முறையாக குற்றத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் விசாரணைக் கைதி, அதிகபட்ச தண்டனையில், மூன்றில் ஒரு பங்கு காலத்தை சிறையில் அனுபவித்திருந்தால், அவரை விடுதலை செய்யலாம்.
- இந்த சட்டங்களின்படியே, சமீபத்தில் நடந்த 50வது அனைத்திந்திய போலீஸ் மாநாட்டில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர், தண்டனையின் பெரும்பகுதியை சிறையில் அனுபவித்தவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தினார்.
- 2022ம் ஆண்டுக்கான தேசிய குற்ற ஆவண காப்பக புள்ளிவிபரங்களின்படி, சிறையில் உள்ள 5,73,220 கைதிகளில், 4,34,302 பேர் விசாரணை கைதிகள்

**விடுதலை**

- இவர்கள் மீதான வழக்குகள் நிலுவையில் இருப்பதால், சிறையிலேயே அடைப்பட்டுள்ளனர்.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் ஒரு உத்தரவை பிறப்பித்தார். சிறிய வழக்குகளில் சிறையில் உள்ளோர் பட்டியலை எடுத்து, சொந்த ஜாமினில் அவர்களை விடுப்பது தொடர்பாக, மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் முடிவு எடுக்கலாம் என்று உத்தரவிட்டார்.
- ஆனால், சொந்த ஜாமின் வழங்க முடியாததால், வழக்கில் கிடைக்கும் காலத்தைவிட பலர், சிறையில் கழித்துள்ளனர்.

SURESH'